# தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,சென்னை.6
ந.க.எண். /ஏ1/இ4/200 நாள் .2008

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி– பொறுப்படி–பொறுப்புப்பணி பணியாற்றியமைக்குப் பொறுப்புப்படி அனுமதிக்க அறிவுரைகள் வழங்குதல்–சார்ந்து.

பார்வை: மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் ந.க.எண். /ஆ3/200 நாள் 2008.

––

1. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலராக பொறுப்புப்பணிபுரிந்த திரு. என்பார், பொறுப்பு பணியாற்றிய காலமான பிற்பகல் முதல் முடிய பொறுப்புப்படி கோரி பார்வையில் காண் கடிதத்தில் கோரியுள்ளார்.

2. மேற்காண் பொறுப்புப்படி கோரும் கருத்துரு உரிய விபரங்கள் இணைக்கப்படாததால், அக் கருத்துரு திருப்பப்படும் நிலையும் கால விரயமும் ஏற்படுகிறது. எனவே அக் கருத்துரு திருப்பப்படுவதுடன் கீழ்க்காண் விபரங்களுடன் கருத்துரு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

3. பொறுப்புப்படி கோரும் கருத்துரு அனுப்புவதற்கான அறிவுரைகள் இவ்வியக்க செயல்முறைகள் ந.க.எண்.<u>58890/சி3/சி11/2006 நாள் 13.6.2006ல்</u> கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் (F.R.49) உரிய விபரங்கள் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.
2. கூடுதல் பொறுப்புப்பணியேற்பதற்கும், பணி விடுவிப்பதற்கும் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட ஆணை நகல்களுடன், கூடுதல் பொறுப்பு ஏற்றுக் கொண்டமைக்கு ஒரு C.T.C. யும் பொறுப்புப்பணியினை விடுவித்தபோது ஒரு C.T.C. .யும் உரிய படிவத்தில் பெற்று (Tamilnadu Treasury Code Form 2 ( See Subsidiary Rule I10 under Treasury Rules.4) பணியேற்ற அறிக்கை தயார் செய்திருக்க வேண்டும்.
3. கருத்துருவில் பொறுப்புப்படி எந்த கருவூலத்தில் காசாக்கப்படவேண்டும் என்ற விபரம் தெரிவிக்கப்பட வேண்டும்.
4. கோரப்படும் பொறுப்புப்படி, இதற்கு முன்னர்பெறப்படவில்லை என்பதற்கான உறுதி மொழி கருத்துருவுடன் இணைக்கப்படவேண்டும்.
5. பொறுப்புப்படி கோரும் அலுவலர் தற்போது பணிபுரியும் அலுவலகம் குறித்த விபரம் தெளிவாகக் தெரிவித்தல் வேண்டும்.

4. மேலும் மேற்காண் விபரங்களின்படி கருத்துரு அனுப்புவதுடன், கூடுதலான கீழ்க்காண் விபரங்களும் இனி வரும் காலங்களில் பொறுப்புப்படி கோரும் கருத்துருவுடன் அனுப்பும்படியும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

a. கருத்துருவுடன் இணைக்கப்படும் இயக்குநரால் வழங்கப்பட்டுள்ள ஆணைகள் மற்றும் இதர கூடுதல் விபரங்கள் அனைத்தும் சான்றொப்பம் செய்து அனுப்புதல் வேண்டும்.

b. பொறுப்புப்படி கோரும் அலுவலர்கள் அளிக்கம் கொடுபடாச்சான்றிதழ் (Non drawal certificate) பொறுப்புப் பணியாற்றிய அலுவலகத்தில் இருந்து பெற்று அனுப்புதல் வேண்டும்.(அசலாக.)

c. மேற்காண் விபரங்களுடன் அனுப்பப்படும் பொறுப்புப்பணி கருத்துருக்கள், அனைத்தும் முதன்மைக் கல்வி அலுவலரால்

பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் சரியாக இருந்தால் மட்டுமே இயக்குநரின் அனுமதிக்கு கருத்துரு அனுப்புதல் வேண்டும்.

d. இவ்விபரத்தினை அவரவர்களின் கட்டுப்பாட்டில் பணியாற்றும் மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர் ஆகியோர்களுக்கு அனுப்பி அவர்களிடம் ஒப்புதல் பெற்று அலுவலக கோப்பில் வைத்திருக்க வேண்டும் என்று அனைத்து முதன்மைக் கல்வி அலுவலருக்கும் தெரிவிக்கலாகிறது.

e. மேற்காண் விபரங்களுடன் அனுப்பப்படும் கருத்துருக்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும் என்றும் , அவ்வாறு இல்லாத கருத்துருக்கள் பரிசீலிக்க இயலாது என்றும், இனிவரும் காலங்களில் பொறுப்புப்படி கோரும் கருத்துருக்கள் அனைத்தும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலமாக அனுப்புதல் வேண்டும் என்று திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் விபரங்களின் படி பெறப்படும் பொறுப்புப்படி கருத்துருக்களை நன்கு பரிசீலனை செய்தபிறகு அனுப்புதல் வேண்டும் என அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்(அனைவருக்கும் கல்வித்திட்டம்)
நகல்—சென்னை.6 பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அன்புடன் அனுப்பப்படுகிறது.
நகல்— தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை.6 அவர்களுக்கு அன்புடன் அனுப்பப்படுகிறது.
நகல்— மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை.6

தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை

## PARTICULARS TO BE FURNISHED WHILE SUBMITTING THE PROPOSAL FOR ADDITIONAL PAY UNDER FUNDAMENTAL RULE 49

1. (i) Nomenclature of the post which fell vacant

   (ii) Date from which the post fell vacant

   (iii) Reasons for arising of the vacant post

   (iv) Scale of Pay of the post

2 (i) Name and designation of the Officer placed in Full Additional Charge

   (ii) Date of Joining in the Additional Post as per CTC (CTC and copy of order for full additional charge to be enclosed)

   (iii) Scale of pay of the regular post held by the officer placed in Full Additional Charge

   (iv) Date of relief from the Full Additional Charge (CTC to be enclosed)

   (v) No of days served in Full Additional Charge
   (Fromé é é é é ..Toé é .é é é é )

   (vi) Whether Full Additional Charge post is independent

3 Whether any one has already been posted in Full Additional Charge before the date indicated in Col. 2(ii) If so

(i) the period during which such officer/officers were in Full Additional Charge of the post

(ii) Whether total period of Full Additional Charge exceeds five months

4 Authority empowered to place in Full Additional Charge under Appendix II of Fundamental Rule 49. ( Quote the relevant item No. ) or put up a copy of the G.O for such delegation.

5 Justify the reasons why the Additional Charge should not be treated as current duties.

6 Whether Full Additional Charge is under Public Sector Undertakings.

7 Whether the officer holds Full Additional Charge or appointed merely to discharge current duties.

8 Whether the previous incumbent has actually given over charge under the orders of Competent Authority.

9 Remarks

Signature of the Applicant.